<u>செ.வெ.எண். 753</u> நாள் 20.11.2007

# செய்தி வெளியீடு

## <u>ரூ.1230.57 கோடியில் நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதி அளிக்கும் திட்டம் – மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி.</u>

நகர்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதியான வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு வசதி ஆகியவைகளை மேம்படுத்துதல், ஏழைமக்களுக்கு தேவையான குடியிருப்பு வசதி, அடிப்படை வசதிகள் மற்றும் குடிசை வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அளவிலான வழிகாட்டும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு 137 கோடியே 44 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய்க்கும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 235 கோடியே 90 லட்சம் ரூபாய்க்கும், மதுரை மாநகராட்சிக்கு 195 கோடியே 46 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய்க்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு 823 கோயே 98 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கும், ஆணையூர் நகராட்சிக்கு 6 கோடியே 38 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கும், தாம்பரம் நகராட்சிக்கு 6 கோடியே 33 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய்க்கும், பல்லவபுரம் நகராட்சிக்கு 6 கோடி ரூபாய்க்கும், ஆவடி நகராட்சிக்கு 5 கோடியே 95 லட்சம் ரூபாய்க்கும், குறிச்சி நகராட்சிக்கு 4 கோடியே 29 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும், குனியமுத்தூர் நகராட்சிக்கு 4 கோடியே 24 லட்சம் ரூபாய்க்கும், கவுண்டம்பாளையம் நகராட்சிக்கு 3 கோடியே 20 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கும், அவணியாபுரம் நகராட்சிக்கு 3 கோடியே 15 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும், திருமங்கலம் நகராட்சிக்கு 3 கோடியே 14 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கும், திருப்பரங்குன்றம் நகராட்சிக்கு 2 கோடியே 43 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய்க்கும் ஆக மொத்தம் ஆயிரத்து 437 கோடியே 93 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு இன்று (20.11.2007) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகர்ப்புற ஏழை மக்கள் பயன்படும் வகையில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இதன்மூலம் 47 ஆயிரத்து 513 வீடுகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட 4 முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய அரசுக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

1. நெற்குன்றம் கிராம பஞ்சாயத்தில் குடிநீர் திட்டம் – 21.70 கோடி ரூபாய்

2. ஆவடி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் – 177.10 கோடி ரூபாய்

3. வள்ளுவர் கோட்டம் பகுதியில் தொடர்ச்சியான குடிநீர் வசதி – 31.77 கோடி ரூபாய்

4. சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் மற்றும் பெரிய நீர்வழி கால்வாய் மேம்பாடு – 998 கோடி ரூபாய்.

இக்கூட்டத்தில் நிதித்துறைச் செயலர் திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை செயலர் திரு.செல்லமுத்து, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை செயலர் திரு.அலாவுதீன், இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயலர் திரு.நாகராஜன், இ.ஆ.ப., டுபிட்கோ நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.கௌரிசங்கர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் டாக்டர் கோபால், இ.ஆ.ப., நிதித்துறை சிறப்பு செயலர் திரு.பிரவின் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இணை ஆணையர் திரு.மக்வானா, இ.ஆ.ப., த.கு.வ.வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சுவரண்சிங், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சிவதாஸ் மீனா, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ராஜேஷ் லக்காணி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு.ஆஷிஸ் சட்டர்ஜி, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**